# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2268/88 - 2022 පෙබරවාරි මස 25 වැනි සිකුරාදා - 2022.02.25

*2268/88 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (X) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25 அ என்னும் பிரிவின்கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV72548 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சேஜிஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2021, சனவரி 22 ஆந்தேதிய 2211/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II ஐ, அதன் நிரல் I இலும் அதன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "சந்தைப்படுத்தலில் கௌரவ வியாபார முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I மற்றும் II இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. சேஜிஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி, மென்பொருள் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி மற்றும் தகவல் தொழினுட்பவியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி என்பன தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :-




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கபொத (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானப் பாடத்துறையில் மூன்று (03) சாதாரணச் சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமை; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கபொத (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03) சாதாரணச் சித்திகள் (S).

2. சேஜிஸ் கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (கணினி விஞ்ஞானம்) |
| மென்பொருள் பொறியியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (மென்பொருள் பொறியியல்) |
| தகவல் தொழினுட்பவியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (கணினி விஞ்ஞானம்) |

**தினேஷ் குணவர்த்தன,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு 10,
2022, பெப்புருவரி 23.

EOG 02 - 0660